# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 122 | 4 Pages | 05.12.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 122 | 4 பக்கங்கள் | 05.12.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம்



திருப்பூர், டிச.5

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 389 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) வரலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) விஜயராஜ், (நிலம்) மலர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவர் புஷ்பா தேவி, தனிதுணை ஆட்சியர் (சமூகப்பாதுகாப்புத்திட்டம்) செல்வி, துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சிவகாசி அருகே அரசு பள்ளி ஆசிரியரை அரிவாளால் வெட்டிய மாணவர்கள்




சிவகாசி, டிச.5

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். அம்மா, அப்பாவிற்கு பிறகு குருவிற்கு மரியாதை கொடுக்க வேண்டும் என குழந்தைகளை சொல்லி வளர்ப்பார்கள். 20ம் நூற்றாண்டு வரை இது கடைபிடிக்கப்பட்டது எனலாம்.

2000த்திற்கு முன்பு வரை ஆசிரியருக்கு மிகுந்த மரியாதை கொடுக்கப்பட்டு வந்தது.

சரியாக படிக்காத மாணவர்களை ஆசிரியர்கள் கண்டிப்பார்கள். பிரம்பு அடி, வெயிலில் நிற்க வைப்பது. முழங்கால் போட வைப்பது, பெஞ்ச் மீது நிற்க வைப்பது, தோப்புக்கரணம் போட வைப்பது என தண்டனை வழங்குவார்கள். இது எல்லாம் தங்களை திருத்துவதற்குதான் என மாணவர்கள் நினைத்துக் கொள்வார்கள்.

தற்போது அது கொஞ்சம் கொஞ்சமாக மாறி வந்துள்ளது. ஆசிரியர் அடித்தால் காவல் நிலையத்தில் புகார் அளிப்பது போன்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. சில மாணவர்கள் ஆசிரியரை தாக்கும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே அரசு பள்ளி ஆசிரியரை மாணவர்கள் அரிவாளால் வெட்டிய அதிர்ச்சி சம்பவம் நடைபெற்றுள்ளது.

பொருளாதாரத் துறை ஆசிரியர் கடற்கரை (வயது 12). இவர் திருத்தங்கல் எஸ்.ஆர்.என். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பொருளாதார துறை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். 11ம் வகுப்பு மாணவர்கள் இருவரை படிக்கும் படி கண்டித்துள்ளதாக தெரிகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த மாணவர்கள் இருவரும் ஆசியரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

காயம் அடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு முதலுவதி பெற்றுள்ளார். இந்த நிலையில் தப்பி ஓடிய மாணவர்களை தனிப்படை அமைத்து போலீசார் தேடிவருகின்றனர்.

## மிச்சாங் புயல் எதிரொலி: கோவை— சென்னை இடையே ரெயில்கள் ரத்து



கோவை, டிச.5

மிச்சாங் புயல் காரணமாக சென்னையில் கனமழை கொட்டுகிறது. இதன் காரணமாக கோவையில் இருந்து இன்று சென்னைக்கு இயக்கப்படும் ரெயில்கள் ரத்து செய்யப்பட்டன.

கோவையில் இருந்து சென்னைக்கு புறப்பட வேண்டிய வந்தே பாரத் ரெயில் (எண் 20644) ரத்து செய்யப்பட்டது. புறப்பட வேண்டிய கோவை–சென்னை இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ் ரெயிலும் (எண் 12680) ரத்தானது.

இதேபோல சென்னையில் இருந்து கோவைக்கு புறப்பட வேண்டிய சதாப்தி எக்ஸ்பிரஸ் ரெயிலும் (எண் 12675), காலை 7.10 மணிக்கு சென்னையில் இருந்து கோவைக்கு புறப்பட வேண்டிய கோவை எக்ஸ்பிரஸ் ரெயிலும் (எண் 12675) ரத்து செய்யப்பட்டன.

இதுதவிர மிச்சாங் புயல் காரணமாக கோவை வழியாக இயக்கப்படும் 23 ரெயில்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இதுதொடர்பாக சேலம் கோட்ட ரெயில்வே அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மிச்சாங்புயல்காரணமாககோவையில் இருந்து வருகிற 6ந் தேதி பரௌனி புறப்பட்டுச் செல்லும் சிறப்பு ரெயில் (எண் 03358), கோட்டயத்தில் இருந்து நரசாபூர் புறப்பட்டுச் செல்லும் சிறப்பு ரெயில் (எண் 07120), கொல்லத்தில் இருந்து நாளை செகந்திராபாத் புறப்பட்டுச் செல்லும் சிறப்பு ரெயில் (எண் 07130), கொச்சுவேலியில் இருந்து வருகிற 6ந் தேதி கோரக்பூர் புறப்பட்டுச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண்12512), திருவனந்தபுரத்தில் இருந்து புதுடெல்லி புறப்பட்டுச் செல்லும் கேரளா எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 12625), புதுடெல்லியில் இருந்து நாளை மற்றும் 6ந் தேதிகளில் திருவனந்தபுரம் புறப்பட்டுவரும்எக்ஸ்பிரஸ்ரெயில் (எண் 12626) ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன.

மேலும் ஷாலிமரில் இருந்து வருகிற 6ந் தேதி நாகர்கோவில் புறப்பட்டு வரும் குருதேவ் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 12660), தன்பாத்தில் இருந்து இன்று ஆலப்புழா புறப்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 13351), ஆலப்புழாவில் இருந்து வருகிற 6,7ந் தேதிகளில் தன்பாத் புறப்பட்டுச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 13352), செகந்திராபாத்தில் இருந்து இன்றும், நாளையும் திருவனந்தபுரம் புறப்பட்டு வரும் சபரி எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 17230), திருவனந்தபுரத்தில் இருந்து வருகிற 5,6,7ந் தேதிகளில் செகந்திராபாத் புறப்பட்டுச் செல்லும் சபரி எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 17229), எர்ணாகுளத்தில் இருந்து இன்று டாடா நகர் புறப்பட்டுச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 18190) ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன.

இதுதவிர கன்னியாகுமரியில் இருந்து வருகிற 6,7ந் தேதிகளில் திப்ருகர் புறப்பட்டுச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22503) ரத்து செய்யப்படுகிறது. பிலாஸ்பூரில் இருந்து நாளை நெல்லை புறப்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22619), எர்ணாகுளத்தில் இருந்து இன்று பாட்னா புறப்பட்டுச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22643), பாட்னாவில் இருந்து வருகிற 7ந் தேதி எர்ணாகுளம் புறப்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22644), கொச்சுவேலியில் இருந்து இன்று கோர்பா புறப்பட்டுச்செல்லும்எக்ஸ்பிரஸ்ரெயில் (எண் 22648), கோர்பாவில் இருந்து வருகிற 6ந் தேதி கொச்சுவேலி புறப்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22647), பாட்னாவில் இருந்து நாளை எர்ணாகுளம் புறப்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22670), பிலாஸ்பூரில் இருந்து இன்று எர்ணாகுளம் புறப்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22815), எர்ணாகுளத்தில் இருந்து வருகிற 6ந் தேதி பிலாஸ்பூர் புறப்பட்டுச்செல்லும்எக்ஸ்பிரஸ்ரெயில் (எண் 22816), ஹதியாவில் இருந்து இன்று எர்ணாகுளம் புறப்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22837), எர்ணாகுளத்தில் இருந்து வருகிற6ந்தேதிஹதியாபுறப்பட்டுச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22838) ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## காசாவின் தெற்கு பகுதி நகரில் தாக்குதல்: இடமில்லாமல் அல்லாடும் பாலஸ்தீனர்கள்



ஹமாஸ், டிச.5

ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த 24ந்தேதி (வெள்ளிக்கிழமை) பிணைக்கைதிகளை விடுவிக்கும் வகையில் ஹமாஸ் இஸ்ரேல் இடையே நான்கு நாள் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

அதன்பின் இரண்டு நாட்கள், ஒரு நாள் என மூன்று நாட்கள் போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டது. இந்திய நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் நிறைவடைந்த நிலையில், ஹமாஸ் அமைப்பினர் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி விட்டதாக இஸ்ரேல் ராணுவம் குற்றம்சாட்டி மீண்டும் காசா மீது தாக்குதல் நடத்த தொடங்கியது.

காசாவில் 23 லட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். இதில் வடக்கு காசாவில்உள்ளபெரும்பாலானோர்தெற்குகாசாவிற்கும்,முகாம்களுக்கும் சென்றுவிட்டனர். வடக்கு காசாவின் பெரும்பகுதி வாழத்தகுதியற்ற பகுதி போன்ற காணப்படுவதாக வீடுகள், குடும்பங்களை இழந்த பாலஸ்தீனர்கள் குமுறி வருகின்றனர்.

இந்த நிலையில் இஸ்ரேல் தரைவழி தாக்குதலை மேலும்மேலும் அதிகரித்து வருகிறது. வடக்கு காசாவை ஒட்டியுள்ள தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. மேலும், தாக்குதலைதீவிரப்படுத்தமுடிவுசெய்துள்ளது.இதனால்அங்குள்ளவர்கள் எகிப்து எல்லையை ஒட்டியுள்ள தெற்கு காசாவிற்கு செல்ல இஸ்ரேல் ராணுவம் வலியுறுத்தி வருகிறது.

இதனால் இருப்பதற்கு இடமில்லாம் பாலஸ்தீன மக்கள் அல்லாடும் நிலை ஏற்பட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் ரத்தான பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்கதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

எகிப்து அகதிகளை அனுமதிக்கவில்லை. இதனால் போர்க்களத்தில் தவித்து வரும் நிலை நீடித்து வருகிறது.

இஸ்ரேல் ராணுவத்தினர் துண்டு பிரசுரங்கள் மூலம் இந்த இடத்தை விட்டு வெளியெறுமாறு தெரிவித்துவிட்டு, இரவு முழுவதும் தாக்குதல் நடத்தினர். குண்டுகள் சத்தம் கேட்டதாக கான் யூனிஸ் நகர வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் ராணுவம் இந்த இடத்தை விட்டு வெளியேறுங்கள். குண்டு வீசப்போகிறோம் என்று போனில் தனக்கு தெரிவித்தார்கள். விதவையும், நான்கு குழந்தைகளின் தாயுமான பெண்மணி ஒருவர் கடந்த 7ந்தேதி வடக்கு காசாவில் இருந்து கான் யூனிஸ் நகரத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு வந்தேன். இதுபோன்ற உத்தரவுகளை காது கொடுத்து கேட்பதில்லை.

உண்மை என்னவென்றால், காசாவில் பாதுகாப்பான இடம் என்று எதுவும் இல்லை. வடக்கு பகுதியிலும் மக்களை கொல்கிறார்கள். தெற்கு பகுதியிலும் மக்களை கொல்கிறார் என விரக்தியோடு தெரிவித்தார்.

இஸ்ரேல் தாக்குதலால் காசாவில் இதுவரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். காசாவில் ஹமாஸை அதிகாரத்தில் இருந்து ஒழிக்கும் வரை போர் ஓயாது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவில் ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்தி வந்த பதுங்கு குழிகளை தேடிப்பிடித்து இஸ்ரேல் ராணுவம் அழித்து வருகிறது.

## இரட்டை என்ஜின் ஆட்சியில் மேலும் 2 மாநிலங்கள்: மொத்தம் எத்தனை தெரியுமா



டெல்லி, டிச.5

4 மாநிலத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கைக்கு முன்பாக இது பாராளுமன்ற தேர்தலுக்கான அரையிறுதி போட்டி போன்றது. இந்த அரையிறுதி போட்டியில் பா.ஜனதாவுக்கு பாடம் கற்பிக்கப்படும் என எதிர்க்கட்சிகள் வர்ணித்தன.

ஆனால், ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கரில் காங்கிரசிடம் இருந்து பா.ஜனதா ஆட்சியை கைப்பற்றியது.

மேலும், மத்திய பிரதேசத்தில் அமோக வெற்றி பெற்றது. எதிர்க்கட்சிகள் குறிப்பாக காங்கிரஸ் சற்று எதிர்பார்த்திருக்காது. ராஜஸ்தானில் மீண்டும் ஆட்சி அமைப்பதில் அசோக் கெலாட் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால், அவரது நம்பிக்கையை பா.ஜனதா சிதைத்து விட்டது.

இந்த மூன்று மாநில வெற்றிகள் மூலம் பா.ஜனதா மிகுந்த உற்சாகத்தில் உள்ளது. ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலத்தில் ஆட்சியை பிடிப்பதற்கு முன்பாக பா.ஜனதா உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், அசாம், ஹரியானா,

உத்தரகாண்ட், திரிபுரா, மணிப்பூர், கோவா, அருணாச்சல பிரதேசம் ஆகிய 10 மாநிலங்களில் ஆட்சி செய்து வந்தது.

இந்த நிலையில் அதில் ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் இணைந்து 12 ஆக அதிகரித்துள்ளது. மேலும் மகாராஷ்டிரா, மேகாலயா, நாகாலாந்து, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது.

மத்திய அரசின் நலத்திட்டங்கள் மாநில அரசுகளுக்கு சென்றடைய மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே அரசு இருக்க வேண்டும். இரட்டை என்ஜின் அரசு இருந்தால்தான் மக்கள் பயனடைவார்கள் என்பதை பா.ஜனதா தாரக மந்திரிமாக கொண்டுள்ளது. தற்போது இந்த இரட்டை என்ஜின் ஆட்சியில் மேலும் இரண்டு மாநிலங்கள் இணைந்துள்ளன.

# சென்னை கனமழை: பாதுகாப்பு உங்களுக்குத்தான் சாலையில் ஒய்யாரமாக நடந்து சென்ற முதலை



சென்னை, டிச.5
மிச்சாங் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாநிலங்களில் கனமழை பெய்து வருகிறது. சுமார் 24 மணி நேரத்திற்குள் 25 செ.மீ. மழை கொட்டித் தீர்த்தது. இதனால் சென்னை புறநகரில் உள்ள நீர் நிலைகள் அனைத்தும் நிரம்பிவிட்டது.

இதனால்நீர்நிலைகளில் இருந்து ஊருக்குள் மழை வெள்ளம் புகுந்த வண்ணம் உள்ளது. அப்படி நீர் நிலைகளில் இருந்து தண்ணீர் வெளியேறும்போது, அதில் முதலை இருந்தால் வெளியேறிவிடும்.

அந்த வகையில் சென்னை வண்டலூர் அருகே உள்ள நெடுங்குன்றம் பெருங்களத்தூர் சாலையில சுமார் 6 அடிக்கும் அதிகமான நீளம் கொண்ட முதலை ஒன்று நீர் நிலையில் இருந்து வெளியேறி, ஒய்யாரமாக நடந்து செல்லும் காட்சி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முதலை நடந்து செல்வதை காரில் சென்ற ஒருவர்வீடியோஎடுத்து அதை எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.மேலும்,முதலை சாலையை கடக்கும் போது 2 பேர் இரு சக்கர வாகனத்தில் கவனமாக செல்வது போன்ற காட்சி இடம் பெற்றுள்ளது.

இதுகுறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில் "சென்னையில் உள்ள பல நீர் ஆதாரங்களில் முதலைகள் ஏற்கனவே உள்ளனதாகவும் புயல் மழை காரணமாக தண்ணீர் அதிகரித்துள்ளதால் ஒரு முதலை வெளியே வந்துள்ளது என்றும் இதனால் பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை, வனத்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் என்றும்" தெரிவித்துள்ளார்.

ஆனால், மழை வெள்ளம் எப்போது வடியும் என அப்பகுதியில் உள்ள மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில், முதலை வீட்டிற்குள் வந்துவிடுமோ என்ற அச்சமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

# தருமபுரியில் சாலையில் ஓடும் கழிவு நீரால் நோய் தொற்று பரவும் அபாயம்



தருமபுரி, டிச.5
தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நெசவாளர் காலனி உள்ளது. இதன் அருகே சேலம் தருமபுரி முக்கிய சாலையான நேதாஜி பைபாஸ் சாலை உள்ளது. இந்த சாலையை ஒட்டி கழிவுநீர் கால்வாய் செல்கிறது இந்த கழிவு நீர் கால்வாயில் நெசவாளர் காலனி பகுதியில் இருந்து வரும் கழிவுநீரும் சேர்ந்து 4 ரோடு வரை கழிவு நீர் கால்வாய் செல்கிறது.

இந்த நிலையில் நெசவாளர் காலனி அருகே உள்ள தனியார் பெட்ரோல் பங்க் முன்பு கழிவுநீர் கால்வாய் தூர்வாரப்படாததால் அடைப்பு ஏற்பட்டு நேதாஜி பைபாஸ் சாலையான முக்கிய சாலையில் கழிவுநீர் செல்வதால் துர்நாற்றம் வீசி வருகிறது. மேலும் அப்பகுதியில் உள்ள வணிக நிறுவனங்கள், வாகன ஓட்டிகள், பாதசாரிகள், பள்ளி கல்லூரிக்கு செல்லும் மாணவ மாணவிகள் நோய் தொற்றுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிறு மழைக்கே கழிவுநீர் கால்வாய் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீரானது நேதாஜி பைபாஸ் சாலையில் 4 ரோடு வரை ஒரு கிலோமீட்டருக்கு செல்கிறது. பெருமழை வரும் போது நேதாஜி பைபாஸ் சாலையில் கழிவு நீருடன் மழை நீரும் சேர்ந்து ஆறு போல் ஓடுவதால் வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்குள்ளாகி வருவது மட்டுமின்றி நோய் தொற்றுக்கும் ஆளாகி வருகின்றனர்.

இது குறித்து நாளிதழ்களில் பலமுறை செய்தி வெளியிட்டும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் நகராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும் நகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். தருமபுரி நகரப் பகுதியில் கழிவுநீர் கால்வாய் தூர்வாரப்படாமல் முக்கிய சாலையில் மழைக்கா லங்களில் கழிவுநீர் கால்வாயாக மாறி உள்ளதை வருட கணக்கில் கண்டும் காணாமல் இருப்பதாக சொல்லப்படுகிறது. இது குறித்து மாவட்ட நிர்வாகமும் நகராட்சியும் உடனடியாக நேதாஜி பைபாஸ் சாலை இரு புறமும் உள்ள கழிவு நீர் கால்வாயை தூர்வாரி புதுப்பிக்க வேண்டுமென பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்துள்ளனர்.

# கடலூர் மாநகராட்சி பகுதியில் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு



கடலூர், டிச.5
வடகிழக்கு பருவமழை மற்றும் வங்க கடலில் புயல் உருவானதால் கடலூர் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வந்தது. இந்த நிலையில் கடலூர் மாநகராட்சி, சிதம்பரம் நகராட்சி, மற்றும் பெருமாள் ஏரி, வீராணம் ஏரி ஆகிய பகுதிகளில் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது கடலூர் கார்த்திகேயன் நகர் மற்றும் முதுநகர் நாராயணசாமி நகர் ஆகிய பகுதிகளில் மோட்டார் பம்புகள் மூலம் மழை நீர் வெளியேற்றும் பணிகள் நடைபெறுவதையும், ஏணிக்காரன் தோட்டம் பகுதியில் உள்ள அங்கன் வாடி மையத்தில் பருவ மழையையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நடைபெற்ற காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாமினையும், குடிகாடு ஊராட்சியில் மழைநீர் வடிய ஏதுவாக புலிக்குத்திகிளை வாய்க்கா ல் தூர்வாரும் பணிகள், பெருமாள் ஏரியை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது ஏரிக்கு நீர்வரத்து மற்றும் நீர் வெளியேற்றுதல் குறித்து ஆய்வு செய்ததோடு, ஏரியை தொடர்ந்து கண்கா ணிக்க நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து சிதம்பரம் வடக்கு மெயின் ரோடு, உழவர் சந்தை எதிரே உள்ள வடிகால் தூர்வாரும் பணிகளையும் மற்றும் பஸ் நிலையம், மணிக்கூண்டு அருகே உள்ள வடிகால் தூர்வாரும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் வட்டத்திற்குட்பட்ட வீராணம் ஏரியை பார்வையிட்டு, ஏரியின் நீர்வரத்து மற்றும் நீர் வெளியேற்றுதல் குறித்து தொடர்ந்து கண்கா ணிக்க நீர்வளத்துறை அலுவலர்களுக்கு உத்தரவி ட்டார்.

பின்னர் அவர் கூறியதாவது: மேலும் பேரிடர் காலங்களில் மழையால் பாதிக்கப்பட்ட கூடிய பகுதிகள் வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ள துணைகலெக்டர் நிலையில் மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டு தொடர்ந்து அனைத்துறைகளும் இணைந்து பருவ மழை தொடர்பாக பணியாற்றி வருகிறார்கள். தொடர்ந்து பெய்து வரும் மழையினால் தற்போது 255 ஹெக்டர் விலை நிலங்களில் மழைநீர் சூழ்ந்துள்ளது. மழைநீர் வடிவதற்கேற்ப போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் .

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அன்சூல் மிஷ்ரா, கலெக்டர் அருண் தம்புராஜ், அய்யப்பன் எம்.எல்.ஏ, மாநகர மேயர் சுந்தரி ராஜா, துணை மேயர் தாமரைச் செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர்ராஜசேகரன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ராஜாராம், கூடுதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் விஜயகுமார் , கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) சரண்யா, சப்கலெக்டர் சுவேத்தா சுமன் , வருவாய் கோட்டாட்சியர் அதியமான் கவியரசு, நீர்வளத்துறை செயற் பொறியாளர் காந்த ருபன் , மாநகராட்சி ஆணையர் காந்திராஜ் , சிதம்பரம் நகராட்சி ஆணையர் கார்த்திகேயன், மாநகர தி.மு.க.செயலாளர் ராஜா, ஒன்றிய செயலாளர்கள் விஜய சுந்தரம், தனஞ்செயன், மாணவரணி துணை அமைப்பாளர் பாலாஜி, தகவல் தொழில்நுட்ப அணி கார்த்திக், கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், மண்டல குழு தலைவர்கள் பிரசன்னா, இளையராஜா, மாநகராட்சி கவுன்சிலர்கள் விஜயலட்சுமி செந்தில், கவிதா ரகுராமன், ஆராமுது, பால சுந்தர் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# உளுந்தூர்பேட்டையில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்: மாவட்ட கலெக்டர் பங்கேற்பு



கள்ளக்குறிச்சி: டிச.5
கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் உளுந்தூர் பேட்டை எம்.எல்.ஏ. மணிக்கண்ணன் விழாவிற்கான ஏற்பாடு செய்து வரவேற்று பேசினார். ஒன்றிய செயலாளரும், நகர மன்ற தலைவருமான வைத்தியநாதன், ஒன்றிய கழக மேற்கு செயலாளரும், உளுந்தூர்பேட்டை யூனியன் சேர்மன் ராஜவேல், முன்னாள் எம்.எல்.ஏ.வும், நகர மன்ற தலைவருமான திருநாவுக்கரசு , திருநாவலூர் யூனியன் சேர்மன் சாந்தி இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர் பிரியா பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பங்கேற்றவர்களை பல்வேறு நிறுவனங்களில் இருந்து வந்தவர்கள் நேர்காணல் நடத்தி தேர்வு செய்தனர். இதில் 5716 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் 1143 பேர் வேலை வாய்ப்பு பெற்றனர். இவர்களுக்கு பணி நியமன ஆணையை மாவட்ட கலெக்டர் ஷ்ர்வன்குமார், எம்.எல்.ஏ.க்கள் உதயசூரியன், மணிகண்ணன் ஆகியோர் சேர்ந்து வழங்கி பேசினார்கள்.

இதில் வேலை வாய்ப்பு துறையின் மண்டல இணை இயக்குனர் லதா, கள்ளக்குறிச்சி மாவட்ட அதிகாரி முரளிதரன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சிவராஜ் , துணைத்தலைவர் அம்பிகாபதி, அறங்காவலர் குழு தலைவர் செல்லையா, நகர மன்ற முன்னாள் ஒன்றிய செயலாளர் தொல்காப்பியன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் சிவக்குமார், உறுப்பினர்கள் கலா, மதியழகன், குமரவேல், செல்வகுமார், ரமேஷ்பாபு, சந்திரகுமாரி, நிர்வாகிகள் ஐஸ்வர்யா, பாலாஜி, மணிகண்டன், ஒன்றிய கவுன்சிலர் ஜெயக்குமார், மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ராணிப்பேட்டை: மழைக்கால நடவடிக்கைகள் தீவிரம்



ராணிப்பேட்டை, டிச.5
காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட உத்தரம்பட்டு ஊராட்சியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் தற்காலிக முகாம் அமைக்கப்பட்டு இருளர் இன மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஷில்பா பிரபாகர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கலெக்டர் வளர்மதி, மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ், திட்ட இயக்குனர் லோகநாயகி, தாசில்தார் பாலச்சந்தர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சையப்புதீன், வெங்கடேசன் ஊராட்சி மன்ற தலைவர் மனோகரன், கிராம நிர்வாக அலுவலர் பூபாலன், ஊராட்சி செயலாளர் சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.

# மகன் சாவில் சந்தேகம் இருப்பதாக கூறி போலீசாரிடம் தாய் புகார்





அரூர், டிச.5
தருமபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள இந்திரா நகர் கிராமத்தை சேர்ந்த ராமலிங்கம் ராதாமணி மகன் ராஜா (வயது 40). லாரி டிரைவர்.இவருக்கு கனகா என்ற மனைவி உள்ளார். இவர்களுக்கு திருமணம் ஆகி 20 வருடங்கள் ஆன நிலையில் 14 வருடங்கள் கழித்து ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்து தனியாக வசித்து வந்தனர்.

இந்த நிலையில் ராஜா கடந்த 30ந் தேதி இரவு வீட்டில் இருந்து வெளியே சென்றார். நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. மறு நாள் காலையில் அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வரட்டாறு கால்வாய் பகுதியில் இயற்கை உபாதை கழிக்க செல்லும் போது ராஜா பிணமாக கிடந்தார்.

அவரது உடலில் பல் வேறு பகுதிகளில் வெட்டுக் காயங்களுடன் இருந்ததை பார்த்து அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து ராஜாவின் உடலை கிராமத்தினர் அவரது வீட்டிற்கு கொண்டு சென்றதாக தெரிகிறது. அங்கு தனது கணவரின் உடலை பிணமாக கொண்டு வருவதை கண்டு ராஜாவின் மனைவி கனகா கதறி அழுதார்.

இதுகுறித்து அரூர் போலீசாருக்கும் மற்றும் வருவாய் துறைக்கும் தகவல் தெரிவிக்கலாம் என்று கிராம மக்கள் சொல்லிய போது அவரது மனைவி கனகா மறுப்பு தெரிவித்த நிலையில் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதுகுறித்து ராஜாவின் தாயார் ராதாமணி அரூர் போலீஸ் நிலையத்தில் தனது மகனின் சாவில் சந்தேகம் இருப்பதாகவும், அடக்கம் செய்யப்பட்ட உடலை தோண்டி பிரேத பரிசோதனை செய்து உயிரிழப்புக்கு காரண மானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் என்று கூறி புகார் கொடுத்துள்ளார்.

புகாரை பெற்றுக் கொண்ட போலீசர் நடவடிக்கை எடுப்பதில் கால தாமதம் செய்த நிலையில் போலீஸ் அவசர கட்டுப்பாட்டுக்கு தகவல் கொடுத்த பிறகு அந்த தகவலின் பெயரில் அரூர் போலீசார் தற்போது புகாரை பெற்றுக் கொண்டு மர்மமான முறையில் உயிரிழந்த ராஜாவின் மனை வியை விசாரணைக்காக அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர்.

மேலும், ராஜாவின் சாவுக்கு குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்த வேண்டும் என்று அவரது தாயார் ராதாமணி மற்றும் உறவினர்கள, இந்திரா நகரைச் சேர்ந்த பொதுமக்கள் ஆகியோர் போலீஸ் நிலையம் முன்பு காத்திருந்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ராணிப்பேட்டை: தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் 1200 பேர் பங்கேற்ற பரத நாட்டிய நிகழ்ச்சி



ராணிப்பேட்டை, டிச.5
வாலாஜா அடுத்த கீழ் புதுப்பேட்டையில் உள்ள தன்வந்திரி ஆரோக்ய பீடத்தின் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர். முரளிதரசுவாமிகளின் 63வது ஜெயந்தி விழாவை முன்னிட்டும் 64 நாட்கள் சிறப்பு ஹோம பூஜைகள் , அபிஷேக, ஆராதனைகளும்,64 நாட்கள் பரத நாட்டிய கலைஞர்கள் ,மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்று வருகிறது.

விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக 1200 பரத நாட்டிய கலைஞர்கள், மாணவிகள் பங்கேற்கும் நாட்டிய மஹோத்சவம் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இந்த நாட்டிய மஹோத்சவ நிகழ்ச்சியில் பரத நாட்டிய கலைஞர்கள், மாணவிகள் என 1200 பேர் பங்கேற்று பரத நாட்டிய கலைஞர் ஷன்மதி ஒருங்கிணைப்பில் நாட்டிய நிகழ்ச்சி நடத்தினர்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு நாட்டிய நிகழ்ச்சியை பார்வையிட்டு பரத நாட்டிய கலைஞர்கள் , மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீபுரம் நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர். பாலாஜி நந்தகோபால், பெங்களூர் ஹெல்த் ப்ளஸ் மருத்துவ மனை டாக்டர். பரசுராமன், வக்கீல் மோகனமுரளி, சென்னை சந்திர சேகர செட்டி, ஆடிட்டர் தேவராஜன் , வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட், பா.ம.க. மாவட்ட செயலாளர் சரவணன், வக்கீல்கள் சங்கர், ஜானகிராமன், ஒன்றிய குழு உறுப்பினர் வேலாயுதம், நகர மன்ற உறுப்பினர் முரளி ஆகியோர் உள்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த 1200 பரத நாட்டிய கலைஞர்கள், மாணவிகள் பங்கேற்று நடத்திய இந்த நாட்டிய நிகழ்ச்சிக்காக தன்வந்திரி ஆரோக்ய பீடத்திற்கு சாதனை சான்றிதழ் வழங்கப்பட்டது.

நாட்டிய மஹோத்சவ நிகழ்ச்சியை முன்னிட்டு வந்த பக்தர்கள், பொது மக்களுக்கு பீடாதிபதி.டாக்டர். முரளிதர ஸ்வாமிகள் ஆசியும், பிரசாதமும் வழங்கினார். முன்னதாக அன்னதானமும் வழங்கப்பட்டது.

மேலும் நாளை 5ந் தேதி பைரவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு 64 பைரவர் யாகமும், அஷ்ட கால மகா பைரவருக்கு 1000 கிலோ விபூதி அபிஷேகமும் நடைபெறுகிறது. பைரவர் ஜெயந்தி விழாவிற்கான ஏற்பாடுகளை தன்வந்திரி குடும்பத்தினர் செய்துள்ளனர்.

# செஞ்சியில் பருவமழைக்கான கட்டுப்பாட்டு மையம்: அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு



விழுப்புரம்: டிச.5

விழுப்புரம் மாவட்டம் கடலோரப் பகுதியில் மிக் ஜாம் புயல் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதால் கடந்த சில தினங்களாக செஞ்சி தொகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.இதன் காரணமாக செஞ்சி,மேல்மலையனூர், வல்லம், ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊராட்சிகளில் புயல், வெள்ளம், மற்றும் கனமழை எச்சரிக்கை யொட்டி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டு வருகிறது.மேலும் முதலமைச்சரின் உத்தரவின் பேரில் மிக் ஜாம்புயல் காரணமாக வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சி, மின்சாரத்துறை, பேரூராட்சிதுறை,தீயணைப்பு காவல் துறையினர், உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து புயல் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைகூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர்செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

அப்போது செஞ்சி தாசில்தார் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரிடர் மேலாண்மை வடகிழக்கு பருவமழைக்கான கட்டுப்பாட்டு மையத்தை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு செய்தார். இதில் செஞ்சி ஒன்றிய குழுதலைவர் விஜயகுமார்,தாசில்தார் ஏழுமலை,கிராம நிர்வாக அலுவலர் ராஜேஷ் மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் உடன் இருந்தனர். ஏரி உள்ளிட்ட இடங்களில் ஏதாவது உடைப்புகள் ஏற்பட்டால் உடனடியாக அதனை சரி செய்வதற்காக செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் மணல் மூட்டைகள் தயார் நிலையில் அடுக்கி வைக்கப்பட்டு வருகிறது.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 67.06 அடியாக உயர்வு



சேலம், டிச.5

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்தது. இதையடுத்து கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் திறக்கப்படும் தண்ணீரும் நிறுத்தப்பட்டது. இதையடுத்து மேட்டூர் அணை நீர்மட்டம் 30 அடிக்கும் கீழ் குறைந்தது. இதனால் டெல்டா பாசனத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீர் கடந்த மாதம் 10ந்தேதி நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் தமிழக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து ஒகேனக்கல் மற்றும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 3 ஆயிரம் கன அடியாக நீடிக்கிறது.

மேட்டூர் அணைக்கு நேற்று 2 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இன்றுகாலைநிலவரப்படி விநாடிக்கு ஆயிரத்து 827 கன அடியாக குறைந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 250 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரை விட நீர்வரத்து அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. நேற்று 66.91 அடியாக இருந்த நீர் மட்டம் 67.06 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 30.22 டி.எம்.சி.யாக உள்ளது. அண்மை காலமாக தோட்டத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆடுகளை வெறி நாய்கள் கடித்து கொல்லும் நிகழ்வு தொடர்ந்து அரங்கேறி வருகிறது.

# வாணியம்பாடி அருகே மீண்டும் அட்டகாசம் வனப்பகுதிக்கு விரட்ட பொதுமக்கள் வலியுறுத்தல்



ஆலங்காயம், டிச.5

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த மதனாஞ்சேரி கிராமத்தில் கடந்த ஒரு மாதமாக மர்ம விலங்கு ஊருக்குள் புகுந்து ஆடுகளை கடித்து குதறுவது தொடர் கதையாக உள்ளது.

இந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு மதனாஞ்சேரி ஊராட்சியை சேர்ந்த ஒன்றிய கவுன்சிலர் சாவித்திரி வீட்டில் வளர்த்து வந்த 13 ஆடுகளை கடித்து குதறியது. இதில் 10 ஆடுகள் அங்கேயே பலியானது.

தகவலறிந்து வந்த வாணியம்பாடி வனத்துறை யினர் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். வனத்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்ட தோடு, மர்ம விலங்கு நடமாட்டத்தை கண்டு பிடிக்க, அந்த கிராமத்தை சுற்றி ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டது.

மேலும் வனத்துறையினர்மர்ம விலங்கை பிடிக்க கூண்டுகள் வைத்து முகாமிட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று இரவு மதனாஞ்சேரி அடுத்த தும்பேரி கிராமத்தில் மர்ம விலங்கு புகுந்தது. அங்கு சம்பத், சின்னகண்ணன், தீர்த்தமலை ஆகியோருக்கு சொந்தமான 6 ஆடுகளை கடித்து குதறியது. அனைத்தும் சம்பவ இடத்திலேயே பலியானது.

தகவல் அறிந்த வனத்துறையினர்விரைந்துசென்று விசாரணை நடத்தினர். பொதுமக்களிடம் இருந்து வனவிலங்குகளை பாதுகாக்க முயற்சி செய்யும் வனத்துறையினர் விலங்குகளிடம் இருந்து பொதுமக்களையும், கால்நடைகளையும் பாதுகாக்க வேண்டும். இனியும் காலம் கடத்தாமல் ஆடுகளை கொன்ற மர்ம விலங்கு எது என்பதை கண்டறிந்து அதனை வனப்பகுதிக்கு விரட்ட வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

மர்ம விலங்கு வேட்டையால் ஆடுகள் தொடர்ந்து பலியான சம்பவத்தால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தை புரட்டியெடுக்கும் கனமழை: காலை 10 மணி வரை வானிலை மையம் எச்சரிக்கை



திருவள்ளூற், டிச.5

மிச்சாங் புயல் காரணமாக சென்னையை அடுத்துள்ள திருவள்ளூர் மாவட்டத்திலும் கனமழை பெய்து வருகிறது. பலத்த காற்றுடன் கன மழை பெய்து வருவதால் சென்னையை ஒட்டியுள்ள திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

புழல் ஏரியில் இருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் மஞ்சம்பாக்கம், வடப்பெரும்பாக்கம் சாலையில் போக்குவரத்து அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. புழல் ஏரிக்கு 5,777 கன அடியாக நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், உபரி நீர் திறப்பு 2,000 கனஅடியில் இருந்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

பொன்னேரி சுற்று வட்டார பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.

பெரும்பாலான இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அரசு பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காலை 10 மணி வரை சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் கனமழை பெய்யும் என வானிலை மையம் எச்சரித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழையின் அளவு:

ஆவடி 28செ.மீ.
சோழவரம் 20 செ.மீ
பொன்னேரி 19 செ.மீ
செங்குன்றம் 17 செ.மீ
தாமரைப்பக்கம் 17 செ.மீ
கும்மிடிப்பூண்டி 15 செ.மீ
ஊத்துக்கோட்டை 15 செ.மீ
திருவள்ளூர் 15 செ.மீ
பூந்தமல்லி 14 செ.மீ
ஜமீன் கொரட்டூர் 12 செ.மீ
திருத்தணி 12 செ.மீ
பூண்டி 12 செ.மீ
திருவாலங்காடு 10 செ.மீ பள்ளிப்பட்டு 6 செ.மீ ஆர்கே பேட்டை 4 செ.மீ

# குடிசை வீடு எரிந்து நாசம்



செய்யாறு, டிச.5

வெம்பாக்கம் அடுத்த வட இலுப்பை கிராமத்தை சேர்ந்தவர் மீனா (வயது 65). விவசாய கூலி வேலை செய்து வருகிறார். இவருக்கு விநாயகம், சங்கர் என 2 மகன்கள் உள்ளனர்.

விநாயகம் சென்னையிலும், சங்கர் வேலூரிலும் தங்கி வேலை செய்து வருகின்றனர். இதனால் மீனா மட்டும் குடிசை வீட்டில் தனியாக தங்கி இருந்தார்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு மீனா மகன் விநாயகத்தை பார்ப்பதற்காக குடிசை வீட்டை பூட்டிக் கொண்டு சென்னைக்கு சென்றார். இந்த நிலையில் நேற்று வீட்டில் மின் கசிவு ஏற்பட்டது.

இதனால் திடீரென குடிசை வீடு தீப்பிடித்து எரிந்தது. அப்போது வீட்டில் இருந்த சிலிண்டர் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. அருகில் இருந்தவர்கள் வெடி சத்தம் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் வந்து பார்த்தபோது குடிசைவீடு எரிந்து கொண்டிருந்தது.

பின்னர் செய்யாறு தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

குடிசை வீடு முற்றிலும் எரிந்து நாசமானது. அருகில் இந்த மற்றொரு சிலிண்டர் தீப்பிடித்துக் கொண்டிருந்ததை தீயணைப்பு வீரர்கள் மேலும் விபத்து ஏற்படாமல் இருப்பதற்காக தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர்.

வீட்டில் யாரும் இல்லாததால் எந்த ஒரு அசம்பாவிதமும் ஏற்படவில்லை. இதுகுறித்து பிரம்மதேசம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வீடின்றி வாழும் இருளர் குடும்பத்தினர் பள்ளியில் தங்க வைக்கப்பட்டனர்



கண்ணமங்கலம், டிச.5

கண்ணமங்கலம் பேரூராட்சி மேநீர் தேக்கத் தொட்டி அருகே சுமார் 50க்கும் மேற்பட்ட இருளர்கள் தங்கள் குடும்பத்தினருடன் வசித்து வருகின்றனர்.

தற்போது மிக்ஜம் புயல் மழை காரணமாக ஆரணி ஆர்.டி.ஓ. தனலட்சுமி உத்தரவின் பேரில், தாசில்தார் மஞ்சுளா ஆலோசனைப்படி, மண்டல துணை தலைவர் திருவேங்க டம், கண்ணமங்கலம் வருவாய் ஆய்வாளர் மணிகண்டன், கிராம நிர்வாக அலுவலர் தமிழரசன் ஆகியோர் இருளர் குடும்பத்தினரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கண்ணமங்கலம் முஸ்லிம் நடுநிலைப்பள்ளியில் தங்க வைத்த னர். உணவு, போர்வை, தலையணை ஆகியவற்றை வழங்கினார்.

# மழைக்கால நடவடிக்கைகள் தீவிரம்



அணைக்கட்டு, டிச.5

மிக்ஜம்புயல்காரணமாக பென்னாத்தூர் பேரூராட்சியில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால், அதனை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள்செய்யப்பட்டு வருகிறது. தாழ்வான பகுதியில்வசிக்கும்பொது மக்களை தங்கவைப்பதற்கான முகாம்கள் உணவு, குடிநீர், கழிவறை ஆகியவசதிகளுடன்தயார் நிலையில் உள்ளது.

மழை நேரங்களில் தேவையில்லாமல் பொதுமக்கள் வெளியே செல்வதை தவிர்க்க வேண்டும். மின் கம்பங்களை கைகளால் தொடுவதோ, கால்நடைகளை அதில் கட்டி வைப்பதையும் தவிர்க்க வேண்டும்.

இடி, மின்னல் ஏற்படும் நேரங்களில், மரங்களுக்கு கீழே நிற்பதை தவிர்க்க வேண்டும் என பொது மக்கள் பேரூராட்சி செயல் அலுவலர் அர்ச்சுனன் தலைமை யிலான பணியாளர்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

குடியிருப்பு பகுதிகளில் காய்ந்து உடைந்து விழும் அபாய நிலையில் உள்ள மற்றும் ஆபத்தான நிலையில் மரங்களை அகற்றுதல், தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்காமல் மண் கொட்டி சமன் செய்தல், மழை நீர் மற்றும் கழிவுநீர்கால்வாய் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

# வெறிநாய்கள் தொடர் அட்டூழியம்: 50க்கும் மேற்பட்ட ஆடுகளை கடித்து கொன்றதால் விவசாயிகள் அச்சம்



எடப்பாடி, டிச.5

சேலம் மாவட்டம் எடப்பாடி சுற்றுவட்டார பகுதிகளில் அண்மை காலமாக தோட்டத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆடுகளை வெறி நாய்கள் கடித்து கொல்லும் நிகழ்வு தொடர்ந்து அரங்கேறி வருகிறது.

கடந்த சில வாரங்களில் மட்டும் சுமார் 50க்கும் மேற்பட்ட ஆடுகள் கொல்லப்பட்டதால் இப்பகுதி விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் எடப்பாடி ஒன்றியத்திற்கு உட்பட்ட சித்தூர் ஊராட்சி, மேல்சித்தூர் பகுதியை சேர்ந்த பாலன் மனைவி நல்லம்மாள் என்பவருக்கு சொந்தமான 18 ஆடுகளை அவரது தோட்டத்தில் கட்டி இருந்தார். நள்ளிரவு நேரத்தில் அவரது தோட்டத்திற்குள் நுழைந்த வெறி நாய்கள், அங்கு கட்டிருந்த 8 ஆடுகளை கடித்து குதறி கொன்றது. மேலும் சில ஆடுகள் படுகாயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது.

ஆடுகளின் அலறல் சத்தம் கேட்டு வெளியே வந்த பழனியம்மாள் குடும்பத்தினர் ஆடுகள் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இது குறித்து வருவாய் துறை மற்றும் கால்நடை துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கால்நடை துறையினர். உயிரிழந்த 8 ஆடுகளை அப்புறப்படுத்தி, காயம் அடைந்த ஆடுகளுக்கு தொடர் சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

# பச்சிளம் பெண் குழந்தை காப்பகத்தில் ஒப்படைப்பு



வேலூர், டிச.5

வேலூர் மாவட்டம் கணியம்பாடியில் இருந்து புதூர்செல்லும்சாலையில் உள்ள லப்பைதெருவில், ஏகாம்பரம் என்பவரது வீட்டின் திண்ணையில் நேற்று அதிகாலை பச்சிளம் குழந்தையின் அழு குரல் கேட்டது.

உடனே ஏகாம்பரத்தின் மனைவி பவுன் சென்று பார்த்தார். அப்போது பேபி படுக்கையால் சுற்றப்பட்ட நிலையில் பெண் குழந்தை ஒன்று இருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தார். இதையடுத்து பொது மக்களும் அங்கு திரண்டு வந்து பார்த்தனர்.

பின்னர் அவர்கள் இதுகுறித்து வேலூர் தாலுகா போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில்போலீசார் விரைந்து சென்று குழந்தையை மீட்டு, 108 ஆம்பு லன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம் பாறை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து அந்த குழந்தைக்கு ஆஸ்பத்திரியில் முதலுதவி சிகிச்சை அளிக்கப் பட்டது. அப்போது டாக்டர்கள் குழந்தையின் உடல் நிலைக்கு எந்த பாதிப்பும் இல்லையெனவும், குழந்தை பிறந்து சுமார்

ஒன்றரை மாதம் இருக்கும் எனவும் தெரிவித்தனர். பின்னர் குழந்தையை காப்பகத்தில் ஒப்படைத்தனர். இதுகுறித்து வேலூர் தாலுகா போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

குழந்தையை வீசிச் சென்ற கல்நெஞ்சம் கொண்ட தாய் யார்?, எதற்காக குழந்தையை விட்டு சென்றார்? என்பது பற்றியும் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.


Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 05.12.2023



# அண்ணன் விஜயகாந்த் நலம் பெறப் பிரார்த்திக்கும் கோடான கோடி இதயங்களில் நானும் ஒருவன் நடிகர் சூர்யா

தமிழ் சினிமாவிலும், அரசியலிலும் கலக்கியவர் கேப்டன் விஜயகாந்த். கடந்த சில ஆண்டுகளாகவே உடல்நலம் பாதிக்கப்பட்டு தொண்டர்களை சந்திக்காமல் வீட்டோடு இருக்கிறார். இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பாக உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் விஜயகாந்த். இதனையடுத்து அவர் விரைவில் உடல்நிலை சரியாகி வீடு திரும்பி வேண்டும் என ரசிகர்களும், அவரது தொண்டர்களும் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

இதற்கிடையில், விஜயகாந்த் நலமுடன் இருக்கிறார். இன்னும் இரண்டு நாளில் உங்களுக்கு நல்ல செய்தி வரும்.








வெகு விரைவில் விஜயகாந்த் வீடு திரும்ப இருக்கிறார். நிச்சயம் வந்து அனைவரையும் சந்திக்க இருக்கிறார் என்று பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நடிகர் சூர்யா தமது எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

அண்ணன் விஜயகாந்த் அவர்கள் நலம் பெறப் பிரார்த்திக்கும் கோடான கோடி இதயங்களில் நானும் ஒருவனாகப் பங்கேற்கிறேன். கோடானகோடி மனிதர்களின் வேண்டுதல்கள் நிச்சயம் பலிக்கும்.! அவரை பூரண குணமாக்கி, நலம் பெற வைக்கும் என பதிவிட்டுள்ளார்.

விஜயகாந்த் சிறப்புத் தோற்றத்தில் நடித்த "பெரியண்ணா" என்ற திரைப்படத்தில் நடிகர் சூர்யா நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கவர்ச்சியில் களமிறங்கிய கயல் ஆனந்தி



பிரபு சாலமன் இயக்கிய கயல் படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானவர், ஆனந்தி. அந்த படத்தில் அவரது நடிப்பு பெரியளவில் பேசப்பட்டது. 'சண்டிவீரன்', 'திரிஷா இல்லைனா நயன்தாரா', 'விசாரணை', 'எனக்கு இன்னொரு பேரு இருக்கு', 'ரூபாய்', 'மன்னர் வகையறா', ராவணகோட்டம் உள்ளிட்ட பலபடங்களில் நடித்துள்ளார்.

கடந்த 2021ம் ஆண்டில் சாக்ரடீஸ் என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது.

இந்தநிலையில் கயல் ஆனந்தி தனது கவர்ச்சி படங்களை சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதுவரை குடும்ப பாங்கான கதாபாத்திரத்தில் மட்டுமே நடித்து வந்த அவர், தற்போது வெளியிட்டுள்ள கவர்ச்சி படங்கள் வைரலாக பரவி வருகின்றன. இதன்மூலம் கவர்ச்சியாக நடிக்கவும் தான் தயார் என்பதை கயல் ஆனந்தி சொல்லாமல் சொல்லியிருக்கிறார் என்று திரையுலகினர் கூறுகின்றனர்.



# திருமண உறவில் இருந்து வெளியேறுகிறேன்... திரௌபதி பட நடிகையின் பதிவால் ரசிகர்கள் அதிர்ச்சி..





இயக்குனர் அறிவழகன் இயக்கத்தில் வெளியான 'ஆறாது சினம்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை ஷீலா ராஜ்குமார்.

தொடர்ந்து டூ லெட், மண்டேலா, திரௌபதி, பிச்சைக்காரன் 2, ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் உள்ளிட்ட படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து அனைவரின் பாராட்டுகளையும் பெற்றார். தற்போது இவர் பல படங்களிலும் வெப் சீரிஸிலும் நடித்து வருகிறார்.

பரதநாட்டிய கலைஞரான இவர் திரைப்பட உதவி இயக்குனர் தம்பி சோழன் என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். பெற்றோர்களின் எதிர்ப்பை மீறி கடலுக்கு நடுவில் வித்தியாசமான முறையில் இவர்களது திருமணம் நடைபெற்றது.

இந்நிலையில் ஷீலா ராஜ்குமார் திருமண உறவில் இருந்து வெளியேறி உள்ளதாக தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார். அவர் அந்த பதிவில், 'திருமண உறவிலிருந்து நான் வெளியேறுகிறேன். நன்றியும் அன்பும்' என்று தெரிவித்துள்ளார். இந்த பதிவை பார்த்த ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்த முடிவிற்கு காரணம் என்ன என்பது குறித்து தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகின்றனர்.

# ஒருநாள் கிரிக்கெட்டில் மோசமான சாதனை படைத்த சாம் கர்ரன்

இதற்கு முன்பு 2006ல் இலங்கைக்கு எதிரான போட்டியில் ஸ்டீவ் ஹார்மிசன் 10 ஓவர்களில் 97 ரன்கள் விட்டுக்கொடுத்ததே மோசமான சாதனையாக இருந்தது.

வெஸ்ட் இண்டீஸ், இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதல் ஒருநாள் போட்டி, ஆண்டிகுவாவில் நேற்று நடைபெற்றது. இப்போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 325 ரன்கள் குவித்தபோதும், பந்துவீச்சில் கோட்டைவிட்டதால் தோல்வியை சந்தித்தது.

இப்போட்டியில் இங்கிலாந்து பந்துவீச்சாளர் சாம் கர்ரன் 9.5 ஓவர்கள் வீசி, 98 ரன்கள் விட்டுக்கொடுத்தார். குறிப்பாக கடைசி நேரத்தில் 45 மற்றும் 49வது ஓவர்களில் முறையே 15 மற்றும் 19 ரன்களை வாரி வழங்கினார். இது வெஸ்ட் இண்டீசின் வெற்றியை எளிதாக்கியது.

இதன்மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன்களை விட்டுக்கொடுத்த இங்கிலாந்து பந்துவீச்சாளர் என்ற மோசமான சாதனையை சாம் கர்ரன் படைத்துள்ளார்

இதற்கு முன்பு 2006ல் இலங்கைக்கு எதிரான போட்டியில் ஸ்டீவ் ஹார்மிசன் 10 ஓவர்களில் 97 ரன்கள் விட்டுக்கொடுத்ததே மோசமான சாதனையாக இருந்தது.

ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் விட்டுக்கொடுத்த இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் விவரம்:

சாம் குர்ரன் : 9.5 ஓவர்களில் 98 ரன்கள்
ஸ்டீவ் ஹார்மிசன் : 10 ஓவர்களில் 97 ரன்கள்
கிறிஸ் ஜோர்டான் : 9 ஓவர்களில் 97 ரன்கள்)
ஜேக் பால் : 10 ஓவர்களில் 94 ரன்கள்
ஜேம்ஸ் ஆண்டர்சன்: 10 ஓவர்களில் 91 ரன்கள்
ஜேம்ஸ் ஆண்டர்சன்: 9.5 ஓவரில் 91 ரன்கள்
லியாம் பிளங்கட் : 10 ஓவர்களில் 91 ரன்கள்
கிறிஸ் வோக்ஸ் : 10 ஓவர்களில் 91 ரன்கள்.







# மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்பும் ரபேல் நடால்!

22 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்பெயினை சேர்ந்த நட்சத்திர டென்னிஸ் வீரர் ரபேல் நடால் ஏறக்குறைய 1 ஆண்டுக்கு பின் மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்ப உள்ளார்.

காயம் காரணமாக இந்த ஆண்டு நடைபெற்ற எந்த வித டென்னிஸ் தொடரிலும் பங்கேற்காத நிலையில், குணமடைந்த பிறகு மீண்டும் களத்திற்கு திரும்ப உள்ளார். அதன்படி நடால் டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ஆம் தேதி வரை நடைபெற உள்ள பிரிஸ்பேன் இண்டர்நேஷனல் டென்னிஸ் தொடரில் விளையாட உள்ளார்.

# தென் ஆப்பிரிக்க வீரர்களுக்கு பும்ரா நெருக்கடி கொடுப்பார் டிவில்லியர்ஸ் எச்சரிக்கை

இந்திய கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து 3 இருபது ஓவர் ஆட்டம், 3 ஒருநாள் போட்டி மற்றும் 2 டெஸ்டில் விளையாடுகிறது. 20 ஓவர் தொடர் டிசம்பர் 10ந் தேதி தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து ஒருநாள் போட்டித் தொடர்நடைபெறும். அதன்பின்னர் முதல் டெஸ்ட் போட்டி 26ந்தேதி செஞ்சுரியனில் தொடங்குகிறது. 2வது டெஸ்ட் போட்டி ஜனவரி 3ந் தேதி கேப்டவுனில் நடக்கிறது. இந்நிலையில் இந்திய அணியின் சுற்றுப்பயணம் குறித்து தென் ஆப்பிரிக்கா முன்னாள் கேப்டன் டிவில்லியர்ஸ் கூறியதாவது:






உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் இந்திய அணி முதல் இரண்டு இடங்களைப் பிடிக்க வேண்டும் என்றால் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறுவது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் தென் ஆப்பிரிக்காவில் இந்திய அணி இதுவரை டெஸ்ட் தொடரை வென்றதில்லை.

இந்தத் தொடரில் தென் ஆப்பிரிக்க வீரர்களுக்கு கடும் சவாலாக ஜஸ்பிரீத் பும்ரா இருப்பார். அவர்களுக்கு கடும் நெருக்கடியை அவர் கொடுப்பார். பும்ரா பந்து வீசத் தொடங்கினால், எதிரணி வீரர்களுக்கு அழுத்தம் கொடுப்பதை நிறுத்தவே மாட்டார். அவரிடம் அனைத்து திறமைகளும் உள்ளன.

கடந்த முறை இந்திய அணி வீரர்கள் தென் ஆப்பிரிக்காவில் விளையாடிய போது பும்ரா தான் தொடர்ந்து நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டு இருந்தார். அவர் எந்த சூழ்நிலையிலும் சிறப்பாக பந்து வீசக் கூடியவர். ஸ்டெம்பை நோக்கி பந்துகளை வீசுவதில் அவர் வல்லவர்.

இந்த முறை ஒட்டுமொத்த இந்திய வேகப்பந்து வீச்சும் தென் ஆப்பிரிக்க வீரர்களுக்கு பெரிய அளவிலான அச்சுறுத்தலைக் கொடுக்கும். இவ்வாறு டிவில்லியர்ஸ் கூறியுள்ளார்.



**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்**

**விளக்கம்:**
அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.